# அருள் ஒளி



ஆடி~ 2025 இதழ்: 169

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (ஆடி – 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## ஆலய திருவிழாக்களில் ஆடம்பரங்களை தவிர்க்க வேண்டும்.

ஆசிரியர் உரை

சைவ ஆலயங்கள் திருவிழா காலங்களை மிகவும் பயபக்தியுடன் வழிபாட்டுக்குரிய அம்சங்களுடன் நேர்த்தியாக நிறைவேற்ற வேண்டும். ஆலயங்களில் திருவிழா காலங்களில் சமய சொற்பொழிவுகள், இசை, தமிழ் நாடகங்கள், புராண இதிகாச விடயங்களை வெளிப்படுத்துகின்ற நடன நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்யலாம்.

இதை விடுத்து வாண வேடிக்கை மற்றும் புதிய பாணியில் சினிமா பாடல்களைப் பாடும் நிகழ்ச்சிகள், வேறு களியாட்ட நிகழ்சிகள் ஆலய வீதியில் திருவிழா காலங்களில் பொருத்தமற்றவை. புலம்பெயர் தேசங்களில் இருந்து மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து ஊர் கோவில்களின் வளர்ச்சிக்கும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் ஏழைகளின் விருத்திக்கும் புலம்பெயர் சமூகம் செய்யும் பெரும் உதவியை நாம் மறக்க முடியாது. எனினும் சிலர் திருவிழா காலங்களில் வீண் செலவுகளை செய்து சமூக புரள்வுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்துகிறார்கள். அந்த வகையிலே தான் சமீப காலத்திலே நீர் கொழும்பு சிலாப பகுதிகளில் இருந்து வாண வேடிக்கைகளை செய்பவர்களை கொண்டு வந்து ஒரு சில மணித்தியாலங்களில் பல இலட்சம் ரூபாய் செலவு செய்வது

இந்தியாவில் இருந்து சினிமா பாடகர்களை அழைத்து வந்து அவர்கள் பக்தி எழுச்சிக்கு பொருத்தம் இல்லாதவற்றைப் பாடுவதும், இளைஞர்கள் விசில் அடிப்பதும், மேடைகளில் ஆடம்பர வர்ணஜால மின்சாரங்களை பயன்படுத்துவதும், மிகவும் கவலை தருகின்ற விடயமாகும். இன்று ஆலயங்களில் சமய பிரசங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகவும் அரிதாகி விட்டது. உங்கள் பாரம்பரியமான வில்லிசை மட்டும் நாட்டுக்கூத்து, இசை,நாடகம், பரதநாட்டியம் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து கலையோடு எமது பாரம்பரிய கருத்துக்களை பிள்ளைகள் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதை விடுத்து வீண் செலவையும் பல்வேறு விபரீதங்களை ஏற்படுத்துகின்ற விடயங்கள் அர்த்தமற்றவை. சமீபத்திலே ஒரு கோயில் திருவிழாவிலே இரண்டு பகுதிகளாக பிரிந்து வாள்வெட்டு சம்பவங்கள் நடைபெற்றதை பத்திரிகைகளின் ஊடாக பலரும் அறிந்திருப்பார்கள். இந்நிலை மாற வேண்டும்.

இதற்கான வாய்ப்புகளை நாம் ஏற்படுத்தக்கூடாது. எனவே எமது சமுதாயம் சீரோடும் சிறப்போடும் வாழ்வதற்கு ஆலயங்கள் அற சிந்தனையோடு திருவிழா காலங்களை பயன்படுத்த வேண்டும். தொண்டு மனப்பான்மையோடு அன்னதான பணி, அறிவுக்கான பணி சமூகத்திற்கு தேவையான நல்ல போதனைகளும் நல்ல விடயங்களும் நல்ல கலை அம்சங்களையும் காப்பதற்கு ஆலய அறங்காவலர்கள் முன் வரவேண்டும். தற்போது பணத்தை வீண் விரயமாக்குகின்ற செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டு போகிறது. அதே வேளையிலே கோயில்களிலே நாம் அடியவர்களை சிந்திக்க வைக்கக்கூடியதாக காலத்திற்கு பொருத்தப்பாடுடைய விடயங்கள் அக்கறை செலுத்தக்கூடியதாக ஆலய அறங்காவலர்கள் முன்மாதிரியாக சில செயல் திட்டங்களை உருவாக்குவது அவசியம் ஆகும்.

எனவே இதுவரை தெரிந்தும் தெரியாது ஆக நடந்தது போக இனிமேலாவது ஆலய திருவிழா காலங்களில் நல்லதோர் ஒழுங்கை அனைவரும் பின்பற்ற வேண்டியது இன்றைய சூழலுக்கு அவசியமானது என்பது எமது கருத்து.

கலாநிதி. ஆறு. திருமுருகன்
ஆசிரியர் ~ அருள்ஒளி

# அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் குருபூசை தினம் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.




அன்னை சிவத்தமிழ்ச்செல்வி துர்க்கா துரந்தரி பண்டிதை கலாநிதி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 16 வது ஆண்டு குருபூசை வைபவம் பக்தி பூர்வமாக ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்றது. முன்னாள் பெரும் தலைவராக இருந்து ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தை உலகம் போற்றும் ஓர் ஆலயமாக அறப்பணிகளில் இருப்பிடமாக மாற்றிய பெருமை அன்னை சிவத்தமிழ்ச்செல்வியை சாரும்.

இந்த நிகழ்வுகள் யாவும் 06/07/ 2025 ஞாயிற்றுக்கிழமை ஆனி மாத விசாக நட்சத்திரத்தில் காலை 9.00 மணிக்கு தேவஸ்தானத்தில் ஆரம்பமானது. பிரதம விருந்தினராக பேராசிரியர் முருகதாஸ் தணிகைச் செல்வன் (இலத்திரனியல், பௌதீகத்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அவர்களும் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி பேரானந்தராஜா டினேஷன் (விரிவுரையாளர், உடலியங்கியல் துறை, மருத்துவ பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

ஆலயத்தின் விசேட பூசையைத் தொடர்ந்து அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடு இடம்பெற்று திருமுறை மண்டபத்தில் விசேட பூசை வழிபாடுகளையும் திருமுறை பாராயணத்தையும் தொடர்ந்து அன்னபூரணி மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினார். இந்த குருபூசை தினத்திலே வழமை போன்று மூத்த சிவாச்சாரியார்கள் மூவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு பொற்கிழியும் வழங்கப்பட்டது.






விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சிவாச்சாரிகளாவோர் சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேஷ குருக்கள் அவர்கள் (பிரதம சிவாச்சாரியார் சிவகாமி அம்மன் கோவில் இணுவில்), சிவஸ்ரீ சேதுசிவபால சர்மா (வேதாகம உபாத்தியர்) அவர்கள் (கந்தசாமி கோவில் இணுவில்), சிவஸ்ரீ கிருஷ்ணாகணேசமூர்த்தி சர்மா அவர்கள் ( ஆதீனகர்த்தா, தோதரவை அம்மன் கோவில், துர்க்காபுரம் தெல்லிப்பழை). பெருமளவு அறிஞர்கள் மற்றும் அன்பர்கள் கலந்து கொண்ட நிகழ்வாக இது அமைந்திருந்தது. அன்னை சிவத்தமிழ்ச் செல்வி ஆற்றிய பணிகள் பற்றி பலரும் பெருமைபட உரையாற்றினார்கள். தொடர்ந்து நிகழ்வுகள் யாவும் மதியம் 12 மணியளவில் இனிதே மகேஸ்வர பூசையுடன் நிறைவு பெற்றது.



















அன்னை
சிவத்தமிழ்ச் செல்வி
www.TelliDurga.Com



www.TelliDurga.Com


www.TelliDurga.Com


www.TelliDurga.Com


www.TelliDurga.Com


www.TelliDurga.Com


www.TelliDurga.Com


www.TelliDurga.Com

# கதிர்காமத்தில் தீ மிதிப்புச் சடங்கு நடைபெற்றது







(08-07-2025) அதிகாலை கதிர்காமம் திருத்தலத்தில் இடம்பெற்ற தீ மிதிப்பு சடங்கில் பெருமளவு பக்தர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.









# மேலைத்தேச பயணங்கள் முடித்து வந்த செஞ்சொற் செல்வர் அன்னை துர்க்காதேவியை வணங்கி தன் பணிகளை மீள ஆரம்பித்தார்




தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள், கனடா, பிரித்தானியா மற்றும் அவுஸ்ரேலியாவில் புலம்பெயர்ந்து வசிக்கும் உறவுகளின் அன்பான அழைப்பினை ஏற்று, கடந்த இரண்டு மாதங்களாக அந்த நாடுகளுக்கு சென்று பல்வேறு அறப்பணி மற்றும் ஆன்மீகம் சார்ந்த நிகழ்வுகளில் பங்கு பற்றி, யாழ்ப்பாணம் திரும்பியதும் தெல்லி நகர் அம்பாளிடம் வருகை தந்து அம்பாளை மனமுருகி வழிபட்டு தனது பணிகளை ஆரம்பித்தார்.

1990ம் ஆண்டு முதன்முதலாக வெளிநாடுகளுக்கு சென்று அங்கு பல்வேறு நிகழ்வுகளில் சிறப்பு சொற்பொழிவுகளை ஆற்றி அதன் மூலம் கிடைக்கும் பணத்தினை, ஈழத்தில் வாழும் உறவுகளின் நன்மைக்கான பல்வேறு அறப் பணிகளுக்காக செலவு செய்யும் பணியை ஆரம்பித்தார். பல ஆண்டுகளுக்கு முன்னர் புகழ்பெற்ற லண்டன் நகரில் உள்ள ஆலயம் ஒன்றில் சொற்பொழிவு ஆற்றி அதன் மூலம் கிடைத்த பணத்தை கொண்டு வந்து யாழ் வைத்தியசாலைக்கு கொடுத்து, கண் சத்திரசிகிச்சை பிரிவினை தாபித்து தனது அறப் பணியை ஆரம்பித்து வைத்தார்.

கனடா, பிரித்தானியா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் ஒழுங்கு செய்யப்பட்ட பல நிகழ்வுகளில் அறப் பணியின் அவசியம் குறித்தும், மனித வாழ்வில் ஆன்மீகத்தின் அவசியம் குறித்தும் மிகத் தெளிவான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். புலம்பெயர் உறவுகள் ஏற்பாடு செய்த பல சந்திப்பு நிகழ்வுகளிலும் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்த விசேட

ஒன்றுகூடல் நிகழ்விலும் பங்கு பற்றி, ஈழ தேசத்தில் அறப் பணியின் அவசியம் குறித்து உரையாற்றினார். மேலும் சில வாரங்கள் கனடாவில் தங்கியிருந்து பல நிகழ்வுகளில் பங்கு பற்ற வேண்டும் என புலம்பெயர் உறவுகள் கோரிக்கை முன்வைத்த போதும், ஈழ தேசத்தில் மிக அவசியமான பல்வேறு ஆன்மீக மற்றும் அறப் பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதால் மீண்டும் ஈழ தேசத்திற்கு வருகை தந்து அம்பாளை மனமுருகி வழிபட்டு தனது பணிகளை ஆரம்பித்தார்.

தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியார் அவர்கள் செஞ்சொற்செல்வர் அவர்களை அன்பாக வரவேற்று ஆசி வழங்கி, செஞ்சொற்செல்வர் அவர்கள் முன்னெடுக்கும் பணிகள் யாவற்றிற்கும் அம்பாள் என்றும் துணை இருப்பாள் என மனதார வாழ்த்தினார்.



# கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது




கொக்குவில் பிரதேசத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக விழா மிகச் சிறப்பாகவும், ஆன்மிகத் தெளிவோடும் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதியன்று நடை பெற்றது.

பல ஆண்டுகளுக்கு பிறகு ஆலயத்தின் கோபுரங்கள், விமானங்கள் மற்றும் பசாதங்களின் மறுசீரமைப்புப் பணிகள் செய்யப்பட்டு, மகா கும்பாபிஷேகம் துவங்கி பக்தர்களின் உள்ளங்களை வருடும் வகையில் சாமி வழிபாடுகள், ஹோமங்கள், வேத மந்திரங்கள், பூஜைகள் நடைபெற்றன. அன்றைய தினம் காலை முதலே புனித தீர்த்தங்களுடன் கூடிய யாகசாலை பூஜைகள் நடைபெற்று, கும்பங்களுக்குள் இறைத்த புனித நீர் கோபுரங்கள் மீது ஊற்றப்பட்ட கும்பாபிஷேக தருணம், பக்தர்களிடையே பெரும் ஆனந்தம், பரவசம் மற்றும் தெய்வீக உணர்வை ஏற்படுத்தியது.












# ஒட்டுசுட்டான் அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.






அதன் பெயரிலேயே காண்பது போன்று, தானாகவே தோன்றிய சிவலிங்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட புனித ஆலயம் ஒட்டுசுட்டான் அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும். இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் தேர்திருவிழா, சிவபெருமானின் மேன்மையை சிறப்பிக்கும் முக்கிய நிகழ்வாக இருக்கிறது.



உற்றாரோடு வந்த இளம் பிள்ளைகள் முதல் முதியோர்கள் வரை அனைவரும் இறைவனை தரிசிக்க வந்ததை காணமுடிந்தது. பக்தர்கள் யாவரும் தேரை இழுத்து புண்ணியம் சேர்த்தனர்.



# பக்தி பூர்வமாக நடைபெற்ற நயினாதீவு அரசியின் மகோற்சவம்





நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் மிகச்சிறப்பாக பக்தி பூர்வமாக நடைபெற்று நிறைவு பெற்றுள்ளது. கடல் தாண்டி சென்று பெருமளவு பக்தர்கள் அன்னையவளை வழிபாடு செய்துள்ளார்கள். நயினாதீவே விழாக் கோலம் பூண்டிருந்தது.





# 35 ஆண்டுக்கு பின் பக்தி பூர்வமாக இடம்பெற்ற மாவைக் கந்தன் கொடியேற்றம்








மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் சுமார் 35 ஆண்டுகளின் பின் இவ்வருடம் இடம்பெற்றது. புதிதாக ஸ்தம்ப மண்டபத்தில் உயர்ந்து நிற்கும் வெள்ளிக் கொடிக் கம்பத்தில் அழகன் முருகனின் கொடி ஏறிய காட்சி பக்தர்களின் அரோகரா முழக்கத்துடன் மிகப்பெரும் ஆன்மீக அருள் அலையை உருவாக்கியது. இம்முறை புதிய உயர்ந்த சப்பறம் உருவாக்கப்பட்டு முருகப்பெருமான் திருவீதியுலா வர போகிறார். ஆடி அமாவாசையை தீர்த்த உற்சவமாக கொண்டு திருவிழா நடைபெறுகிறது. பெருமளவு பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து அபிசேக கந்தனை வழிபட்டு வருகின்றனர்.




## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



எமது துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பரம்பரை தர்மகர்த்தா சபையை சேர்ந்த அமரர் மு. ஜனநாயகம் ஐயா அண்மையில் இறைபதம் அடைந்தார். கல்வியிலும் கலைகளிலும் வல்லவரான இவர் சிறந்த புல்லாங்குழல் வித்துவான் ஆவார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல துர்க்காதேவியை பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க ஆயுட்கால அங்கத்தவரும், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளது தந்தையாருமாகிய சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி சிவத்திரு.ந.சிவபாலகணேசன் அவர்கள் (13-07-2025) இறைபதமடைந்தார். அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை பிரார்த்திக்கிறோம்.





# 55 வருடமாக ஏன் திருவாசகம் படிக்கிறீர்கள்?

ஒரு பெரியவர் எப்போது பார்த்தாலும் தன்னுடைய வீட்டு வாசலில் அமர்ந்தபடி, திருவாசகம் படித்துக் கொண்டே இருப்பார்.

இளைஞன் ஒருவன் பல நாட்களாக. இதனை கவனித்துக் கொண்டே இருந்தான். ஒரு நாள் அவரிடம் வந்து கேட்டான்.

தாத்தா. எப்பப் பாத்தாலும் இந்த புத்தகத்தையே படிச்சிட்டு இருக்கீங்களே இதை எத்தனை நாளா படிக்கிறீங்க? என்றான்.

பெரியவர் சொன்னார், ஒரு அம்பது அம்பத்தஞ்சு வரு‘ம் இருக்கும்

இளைஞன்: அப்படின்னா, இந்தப் புத்தகம் உங்களுக்கு மனப்பாடம் ஆயிருக்குமே அப்புறம் ஏன்
இன்னும் படிக்கிறிங்க? என்றான். தாத்தா சிரித்தபடி கூறினார், எனக்கு ஒரு உதவி செய் அதை நீ செஞ்சு முடிச்சப்புறம் நான் பதில் சொல்றேன்

இளைஞன் கேட்டான், என்ன உதவி தாத்தா?

பெரியவர் ஒன்றும் பேசாமல் பக்கத்தில் இருந்த ஒரு மூங்கில் கூடையை எடுத்தார். அதில் அடுப்புக் கரி இருந்தது அதை ஒரு மூலையில் கொட்டினார். பல நாட்களாகக் கரியை சுமந்து, சுமந்து அந்தக் கூடையின் உட்புறம் கருப்பாக மாறி இருந்தது

பெரியவர் சொன்னார், தம்பி. அதோ அங்கே இருக்குற தண்ணீர் பைப்புல இருந்து இந்தக் கூடையில கொஞ்சம் தண்ணி பிடியேன் என்றார். இளைஞனுக்கு சிரிப்பு வந்தது இருந்தாலும் பெரியவர் சொல்லிவிட்டதால் எடுத்துச் சென்று தண்ணீர் நிரப்பி எடுத்து வந்தான். அவன் வந்து சேருவதற்கு முன்பே எல்லா நீரும் மூங்கில் கூடையின் ஓட்டைகள் வழியே தரையில் ஒழுகிப்போனது

பெரியவர் சொன்னார், இன்னும் ஒரே ஒரு முறை

இளைஞன் மீண்டும் முயன்றான். ஆனால், மூங்கில் கூடையில் தண்ணீர் எப்படி நிற்கும்? மீண்டும் கீழே கொட்டிப் போனது

பெரியவர் கேட்டார், இந்த தாத்தாவுக்காக இன்னும் ஒரே ஒரு முறை மட்டும் தண்ணீர் நிரப்பி பாரேன் என்றார்.

இளைஞன் ஒரு முடிவுக்கு வந்தான். இம்முறை மட்டும் அவர் சொல்கிறபடி செய்து விட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடிவிடுவோம் அவர் எந்தப் புத்தகத்தைப் படித்தால் எனக்கென்ன வந்தது?

தண்ணீர் பிடித்தான். வழக்கம் போலவே எல்லாத் தண்ணீரும் தரையில் தாத்தா, இந்தாங்க உங்க கூடை. இதில் தண்ணி நிக்காதுன்னு உங்களுக்குத் தெரியுமா தெரியாதா? எதுக்கு என்னை இந்தப் பாடு படுத்துறீங்க என்றான்

அவர் புன்னகையோடு சொன்னார், இதுல தண்ணி நிற்காதுன்னு எனக்கும் தெரியும் நீ முதல்ல தண்ணீர் பிடிக்கப் போகும் போது இதோட உட்புறம் எப்படி இருந்தது? என்றார்.

இளைஞன் சொன்னான், ரொம்ப அழுக்குப் பிடிச்சு கருப்பா இருந்தது
இப்போ பார் என்றார். தண்ணீர் பட்டு, பட்டுக் கரிக்கட்டைகளின் கறுப்பு நிறம் கலைந்து கூடையின் உட்புறம் சுத்தமாகி இருந்தது

பெரியவர் சொன்னார்,தம்பி, நீ கேட்ட கேள்விக்கு பதில் இதுதான் எத்தனை முறை தண்ணீர் பிடிச்சாலும் மூங்கில் கூடை நிரம்பவே இல்லை ஆனாலும்.

ஒவ்வொரு முறையும் நீரில் நனைய கூடை சுத்தமாயிடிச்சு அது போலத்தான் எத்தனை முறை படிச்சாலும் முழு திருவாசகமும் மனப்பாடம் ஆயிடும்னுசொல்ல முடியாது ஆனா படிக்கிற ஒவ்வொரு முறையும் உள்ளுக்குள்ள இருக்கும் அழுக்கும் கறையும் சுத்தமாகிக்கிட்டே இருக்கும் என்றார் அந்த வார்த்தைகளின் உண்மை அந்த இளைஞனின் மனதில் ஆழ்ந்து யோசிக்க செய்தது

இறைநாமம் சொல்ல, சொல்ல நம் மன அழுக்குகள் அகலும் பக்தி காவியங்கள் படிக்க, படிக்க. இறை சிந்தனை பெருகும் மனசஞ்சலம் விலகும் நம் முன் வினைகள் அகலும்.

## தணிகாசலம் பூஞ்சோலை புனரமைப்பு வேலைகள் நிறைவு பெற்றன

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தெற்கு புற வாயிலில் காணப்படும் அமரர் தணிகாசலம் அவர்கள் நினைவாக உருவாக்கப்பட்ட பூஞ்சோலை அவரது மகன் விஜயகுமாரின் நிதியுதவி உடன் மீள புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. தேவஸ்தானத்தின் மலர்கள் மற்றும் மாலைகள் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்ற இந்த பூஞ்சோலையை நல்கிய அமரர் தணிகாசலம் குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்









# வரலாற்று பெருமை மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில்

**நல்லூர் கந்தசாமி ஆலய மகோற்சவம் ஆரம்பமாவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது**




ஈழ நாட்டில் வடபகுதியில் உள்ள கோவில்களுள் சரித்திரப் பெருமையுடன் சிறந்து விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோவில். பழைய சரித்திர மூலநூல்களாகிய கைலாயமாலை, வைபவ மாலை முதலியன, இக்கோவில் ஏறக்குறைய ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சிங்கையாரியச் சக்கரவர்த்தியின் மந்திரியாகிய புவனேகவாகு என்னும் பட்டம் தாங்கிய நீலகண்டன் என்னும் பிராமணனால் கட்டப்பட்டது எனப் பகருகின்றன, சமீபகாலத்துள்ள சரித்திர ஆசிரியர்களின் ஆராய்ச்சியின் பிரகாரம், அது ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர், நல்லூரைச் சூறையாடி ஆரியச் சக்கரவர்த்தியைத் துரத்திய திரிசங்கபோதி புவனேகவாகு என்னும் நாமமுள்ள செண்பகப் பெருமாள் அல்லது சப்புமால் குமாரய என்னும் கோட்டை மன்னன் மகனால் கட்டப்பட்டது.



கோபுரங்களுடனும், சிற்ப அலங்காரங்களுடனும் திகழ்ந்த கோவிலை போர்த்துக்கீசர் 1620-ல் தரைமட்டமாக்கினர். அது இடிக்கப்படுமுன் அதன் பாதுகாப்பாளனாக இருந்த சங்கிலி என்னும் சைவப் பண்டாரம் அக்கோவில் விதானங்கள் வரையப்பட்ட செப்புச் சாசனங்களையுந் திருஆபரணங்களையுங் கொண்டு மட்டக்களப்புக்கு ஓடினான். அக்கோவிற் குருக்கள்மார் அங்கிருந்த சிலர் விக்கிரகங்கள் தாமிர விக்கிரங்களைப் பூதராயர் கோவிலுக்குச் சமீபத்தில் உள்ள குளத்திலே புதைத்து விட்டு நீர்வேலிக்கு ஓடினர்.

அதன் பின்னர் சைவ முயற்சிகளுக்கு ஓர் நூற்றாண்டுகளுக்குமேல் இருள் சூழ்ந்திருந்தது. ஒல்லாந்தர் காலத்தில் வானில் ஓர் ஒளி தோன்றிற்று. 1793-ம் ஆண்டு நல்லூர் கிருஷ்ண ஐயர் என்பவர் ஒல்லாந்த அரசாட்சியாரின் அனுமதியுடன் ஓர் ஓலைக் கொட்டிலை அமைத்து வெள்ளி வேலாயுதத்தை வைத்துப் பூசித்து வந்தார். இது பழைய கோவில் இருந்த இடத்தில் தான் வைக்கப்பட்டதோ, அன்றேல் அதன் சமீபத்திலோ என்பது தெளிவாக அறியமுடியவில்லை. இக்கோவிற்குடிசையில் வெள்ளிக்கிழமைகள் தோறும் கந்தபுராணப் படிப்பு ஒழுங்காக நடந்து வந்தது. இப்படிப்பு நடத்தியவர்களுள் பிற்காலத்தில் வித்வ சிரோமணி ந. ச. பொன்னம்பலம்பிள்ளை சிறந்தவர். இந்துக்களின் உதவியால் அது சிறிது சிறிதாகத் திருத்தம் பெற்றது. ஆங்கிலர் ஆட்சியின் தொடக்கத்தில் (1798-1805) நோர்த் பிரபு இலங்கைத் தேசாதிபதியாக இருந்தார். அவர் காலத்தில் கிருஷ்ண ஐயர் மகன் சுப்பையருக்கு நல்லூர்க் கந்தசுவாமிக் கோவிற் குருக்கள் என்னும் நியமனப் பட்டோலை தேசாதிபதியின் கைச்சாத்துடன் அளிக்கப்பட்டது. அவர் சந்ததியில் உள்ளவரும் சுப்பையரின் பூட்டனின் மகனுமாகிய நல்லூர் சிவன் கோவில் தாபகர் ஸ்ரீ நா. பொ. கார்த்திகேயக் குருக்களிடத்தில் சந்ததி முறையாக வந்துள்ள வாளும் நியமனப் பட்டோலை முதலியனவும் இருந்தன. அவருடைய மகன் ஸ்ரீ கைலாசநாதக் குருக்கள், எம் ஏ. இலங்கைப் பல்கலைக்கழகத்து ஆசிரியராக விளங்குகின்றார். இவரிடம் நியமனப் பட்டோலை முதலியன உண்டு.

## மாப்பாண முதலியார்



கி. பி. 1807-ல் டொனாசுவாம் இரகுநாத மாப்பாண முதலியார் கச்சேரிச்சிறப்பராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். இவரே நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்தற் பொருட்டு, பல முயற்சிகள் செய்தனர். கோவிலுக்கு அண்மையில் முத்திரைச் சந்தை எனப்படும் சந்தை இருக்கிறது. அங்கு நெசவு செய்யும் கைக்கோளர் இருந்தனர். மாப்பாண முதலியார் முத்திரை வருவாய்ப் பகுதிக்குப் பொறுப்பாளராக இருந்தார். புதிதாகச் செய்யப்படும் ஒவ்வொரு ஆடைக்கும் முத்திரை போடவேண்டி இருந்தது. மாப்பாணர் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருப்பணிக்கு என்று ஒவ்வொரு சேலைக்கு ஆறு சதவீதம் பணம் பெற்றார்.

பிரதம குருக்களுடன் மாப்பாண முதலியாரும் கோவிற் களஞ்சியத் திறவுகோலைப் பெற்றனர். கோவிலுக்கு இரண்டு திறப்புகள் இருந்தன. பின்னர் அத்திறப்புகள் இரகுநாத மாப்பாணர் வழியிலுள்ளவர்களுக்குக் கிடைத்தன.அக் கோவிலுக்குத் தூபி இல்லாமல் இருந்தது. விதிப்படி மூல மூர்த்தி சிலையால் அமைக்கப்பட்ட சுப்பிரமணிய மூர்த்தியாய் இருத்தல் வேண்டும் என்று நாவலரையா கோவில் அதிகாரிகளுக்குப் போதித்தார். அவர்களோ அதற்குச் செவிகொடுக்கவில்லை. பின்பு நாவலரையாவை அதிகாரிகள் கோவிலுக்கு அழைத்து பிரசங்கம் செய்வித்தனர். நாவலரையாவின் முயற்சியால் கோவிலைக் கட்ட ஒரு பொதுச்சபை கூட்டப்பட்டது. அச்சபையில் கோயிற் கட்டடத்திற்காக ஆறாயிரம் ரூபா வரையில் கையொப்பஞ் சேர்ந்தது. நாவலரையா கருவூரிலிருந்து மூவாயிரம் ரூபாவுக்குக் கருங்கற்களும் எடுப்பித்துக் கொடுத்தார்.

## பண்டைச் சின்னங்கள்



இக் காலத்தில் உள்ள கந்தசுவாமி கோவில் மூலஸ்தானத்துக்குள் இருக்கும் இரண்டு தாமிர விக்கிரகங்கள் - வள்ளியம்மனும் தெய்வயானை அம்மனும் ஆதிக் கோவிலில் இருந்தன, என்று ஸ்ரீ.

கா. வெ, கார்த்திகேயக் குருக்கள் வாயிலாக அறிந்துள்ளோம். அவை வேலாயுதத்தின் இரு பக்கமும் நிறுத்தப்பட்டிருக்கின்றன, சிறப்பான விழாக் காலங்களில் அந்த விக்கிரகங்களையே இன்னொரு வேலாயுதத்துடன் கொண்டு பவனி செல்வர். அத்தாமிர விக்கிரகங்கள் சில காலத்துக்கு முன் பூதராயர் கோவிலுக்குச் சமீபத்தே உள்ள பூதராயர் வளவு என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டன, அது சட்டநாதர் கோவிலுக்குப் பின்புறத்தில் உண்டு.

## புவனேகவாகுவின் பதக்கம்

ஆதிக் கந்தசுவாமி கோவிலைக் கட்டிய புவனேகவாகுவினதும், புவனேகவாகு என்னும் பெயர் வரையப்பட்டுள்ளதுமான ஓர் அரிய பழைய பதக்கம் இன்றும் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் உளது. தமக்குப் பிதிராசச்சிதமாகக் கிடைத்த இப்பொருளை பூதனாராய்ச்சியார் என்பவர் (பூதத்தம்பி என்னும் தமிழ் மந்திரியின் மகன்) நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குக் கொடுத்தார்“ என ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் கூறப்படுகிறது. பூதனாராய்ச்சி வளவு நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அப்பால் உள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி மேல் புகழ் மாலை சாற்றிய புலவர்கள் பலர். வெண்பா, விருத்தம் கலித்துறை, அந்தாதி, முதலிய பலவகைப் பாடல்களைப் பாடிப் போற்றியுள்ளனர். அவைகளில் சிலவற்றை ஈண்டுக் குறிப்பாம். இற்றைக்கு 165 ஆண்டுகளுக்கு முன்னே விளங்கிய சந்திர சேகர பண்டிதர் நல்லூர்க் கந்தசுவாமி மீது ஒரு கிள்ளை விடுதூது பாடியுள்ளார். நாவலரையாவின் ஆசிரியர் சேனாதிராய முதலியார் நல்லூர் கந்தசுவாமியைத் தரிசனஞ் செய்யச் செல்லும் பொழுது வழியிலே பாடப்பட்டன நல்லை வெண்பா. உடுப்பிட்டி குமாரசுவாமி முதலியார் நல்லைக் கலித்துறையும், வடகோவை சபாபதி நாவலர் நல்லைச் சுப்பிரமணிய பதிகமும் பாடியுள்ளனர்.



புலோலி, வே, தா. தியாகராசபிள்ளை அவர்களின் திருநல்லூரலங்காரம் விருத்தப் பாவில் பாடப்பட்டது. நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நல்லூர் கந்தர் பதிகம், நல்லூ

ரந்தாதி, நல்லூர் முருகன் திருப்புகழ் முதலியன இயற்றியுள்ளார்.



வண்ணை நெ. வை. செல்லையா அவர்கள் நல்லைச் சண்முக மாலையும் (1924), நல்லைச் சுப்பிரமணியர் விருத்தமும் (1928) பாடி வெளியிட்டனர். வண்ணை பொன்னுத்துரை ஐயர் நல்லூர்க் கந்தசுவாமி மீது நிரோட்டயமக அந்தாதி பாடியுள்ளார்.
வண்ணை வை. இராமநாதன் அவர்கள் நல்லூர்க் கந்தர் அந்தாதி, அகவல் முதலியன எழுதி நாவலர் அச்சுக்கூட அதிபரால் வெளியிடப்பட்டன. கரணவாய் செவ்வந்தி நாததேசிகர், நல்லைக்கோவை (1932) எழுதி பதிப்பித்துள்ளார், ம. க. வேற்பிள்ளைப் புலவர் ஈழமண்டல சதகத்தில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப் பற்றிப் பாடிய தனிச் செய்யுள் பின்வருமாறு:

**’மற்று மிந் நல்லைத் தலத்தின் விசேடங்கள் வாயில் வழங்க முடியுமோ**
**வருகால மாறினுந் திருவருள்விலாசமோ வஞ்சர் நெஞ்சையு முருக்கும்**
**உற்றவரை முன்னும் யாமுற்றுவோமேயெனவுள் நொந்திடச் செய்துமே**
**லுன்னியாங் குன்னிய வரங்களெல்லா முதவியுறுகிலாரையு முறுத்தும்**
**நற்றவத் தொண்டர் தமதழகுதோத்திர வழகு நாடவருமோ தமழகு**
**நந்தன வனத்தழகு நால் வீதி யழகேங்கி நளிர் பந்த ரழகி வைகளிற்**
**சற்றவத் திருவருள் விலாசமே காணலாஞ் சாந்த நாயகி சமேத சந்த்ர மௌலீ**
**சனே யைந்தொழில் விலாசனே சந்திர புரதல வாசனே.”**


# சுதுமலை சிவன் ஆலயம்



சுதுமலைக் கிராமத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களும் சுதுமலை சிவன் (ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி) முக்கியத்துவம் வாய்ந்த ஆலயம்.

இக்கோயிலைச் சுற்றிவர சுதுமலை புவனேஸ்வரி அம்மன், சுதுமலை முருகமூர்த்தி கோயில், பிட்டி வைரவர் மற்றும் தங்குசங்களை கண்ணகி அம்மன் என்பன காணப்படுகின்றன. முந்நாளில் விநாயகர் ஆலயமாக இருந்ததாகவும், பின்னாளில் ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் துணை வேண்டி விநாயகரை எடுத்து விசுவநாத சுவாமியை சிவலிங்க உருவில் வைத்து வழிபட்டு வரலாயினர்.











இக்கோயிலில் நடராஜர், விநாயகர், விசாலாக்ஷி அம்மன், தட்சணாமூர்த்தி, கஜலட்சுமி, வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான், விஷ்ணு, சண்டேஸ்வரர் நவக்கிரகங்கள், பைரவர் மற்றும் நாகதம்பிரான் பரிவாரத் தெய்வங்களாக உள்ளன. இங்குள்ள மற்றைய சிறப்பு சிவனுக்குரிய சிவலிங்க மரம் பெரியளவில் வளர்ந்து காணப்படுகின்றது. அதற்கு அருகில் வில்வ மரமும் அதனுடன் இணைந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கமும் காணப்படுகின்றது. இச்சிவலிங்கப் பெருமானுக்கு விரும்பியவர்கள் நீர் அபிஷேகம் செய்யலாம்.







## திருவிழா

பங்குனி உத்தரத்தில் தேர் உற்சவம் இங்கு இடம்பெறும். அன்று சுவாமி கட்டுத்தேரில் வலம் வருவார்.இவ்வாலயத்தின் மற்றொரு சிறப்பு வீரமணி ஐயர் இவ்வாலயத்தின் மீது திருவூஞ்சல் பாடியுள்ளமையாகும்.

## உசாத்துணை நூல்கள்

1.ஈழத்து சிவாலயங்கள்
கட்டுரை - எஸ். உதயபாலன்
நூல் தொகுப்பாசிரியர் - திருமதி வசந்தா வைத்தியநாதன்










க. கபிலன்

## சுதுமலை ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் ஸமேத விஸ்வேஸ்வரஸ்வாமி கீர்த்தனை

**இயலிசை வாரிதி**
**யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணிஐயர்**

ராகம்: கரஹரப்பிரியா தாளம்: ஆதி

**பல்லவி**

விசாலாக்ஷி தழுவிடும் விஸ்வேஸ்வர நாதா
விரிமலர் பாதமே வேண்டிச் சரணடைந்தேன்

அனுபல்லவி

நிலாப்பிறை யணிந்திடும் நிர்மலனே சிவனே
குலாவிடும் விசாலாக்ஷி கொழுநனே நீயருள்வாய்

**சரணம்**

மங்களம் நிறைந்திடும் மகாதேவனே சரணம்
பொங்கரவம் அணியும் பூரணனே சரணம்
சங்கத் தமிழும்வேத சாம்பவனே சரணம்
எங்கணும் இன்பமே இறைஞ்சும் இறை சரணம்

ராகம்: சுரட்டி மங்களம் தாளம்: ஆதி

**பல்லவி**

விஸ்வ நாத ஸ்வாமிக்கு ஜெயமங்களம் - தேவி
விசாலாக்ஷி அம்மைக்கும் சுப மங்களம்

**அனுபல்லவி**

அஷ்ட திக்குப் பாலகர்க்கும்
அந்தணர்க்கும் வானவர்க்கும்
இஷ்ட பரிவார மூர்த்தி
எல்லோருக்கும் மங்களம்

**சரணம்**

வன்ன வாரணத் தவர்க்கும்
வடிவேல் முருகனுக்கும்
அன்னை புவ னேஸ்வரிக்கும்
அநந்தன் மது சூதனர்க்கும்
மின்னிடும் சூலமேந்தி
மிளிர் ஞான பைரவர்க்கும்
நன்னகர் சுது மலைக்கும்
நல்லடியார் யாவருக்கும் (மங்களம்)

# புதிய அலுவலகத்திற்கான பால் காய்ச்சும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது




தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் சமய, அறப் பணிகளை விரிவுபடுத்தி, திறமையாக செயல்படுத்துவதற்கான புதிய அலுவலகத்திற்கான பால் காய்ச்சும் வைபவம் இடம்பெற்றது. தேவஸ்தானத்தில் நடைபெற்ற சிறப்புப் பூசையையடுத்து, தெல்லி நகர் அன்னையின் திருவுருவ படம் புதிய அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, தேவஸ்தானத்தின் சமய ஆசாரங்களின் படி அங்கே வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். தேவஸ்தானம் மேற்கொண்டுவரும் சமய மற்றும் சமூக பணிகளை மேலும் விரிவுபடுத்தி, திறமையான முறையில் செயல்படுத்த இந்த புதிய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இது தேவஸ்தானத்தின் பணிகளை ஒருங்கிணைத்து, மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதில் முக்கிய பங்கை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.







www.TelliDurga.Com



www.TelliDurga.Com


www.TelliDurga.Com


www.TelliDurga.Com



www.TelliDurga.Com


www.TelliDurga.Com



# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கந்தபுராணம் "அசுர காண்டம்" வெளியிடப்பட்டது




தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், பன்னிரு திருமுறைகளை முறையாக நூல் வடிவில் வெளியிட்ட பெருமை பெற்ற ஈழத்திலுள்ள அபூர்வமான ஆலயமாக திகழ்கிறது. இந்த வரலாற்றுப் பணியின் தொடர்ச்சியாக, கந்தபுராணத்தின் மூன்றாவது பாகமான "அசுர காண்டம்" கடந்த ஜூலை 13ஆம் நாள் ஆலயத்தில் விமர்சையாக வெளியிடப்பட்டது. இந்நூல், உலக சைவத் தமிழ் பேரவையின் அனுசரணையுடன் அச்சிடப்பட்டது. விழாவின் போது நான்மறை நாயன்மார்கள் திருவுருச் சிலைகளுடன் பன்னிரு திருமுறைகளும் நூல்களும் உள்வீதியில் வலம் வந்து, விசேட பூஜைகளுடன் வெளியீடு நடைபெற்றது. அவுஸ்ரேலியா உலக சைவப்பேரவையின் ஏற்பாட்டில் , வைத்தியகலாநிதி.அமரர் அ.பேரின்பநாயகம் குடும்பம் (குருநாதசுவாமி கோவிலடி,தெல்லிப்பழை) நிதியுதவியில் இத்திருப்பணி நிறைவேறி உள்ளது.


இந்நிகழ்வில், திருமுறைகளை முறையாக ஓதிய அம்பாளின் மீளா அடியார்களுக்கு உயர் கௌரவம் வழங்கப்பட்டது. இந்த சமய சேவையைப் பாராட்டும் அரிய முயற்சியாக விழா அமைந்தது.
அசுர காண்டம் நூல், கந்தபுராணத்தை ஓதுகின்ற ஆலயங்களுக்கு இலவசமாக, ஏனைய ஆலயங்களுக்கு அச்சுக் கூலியுடன்


வழங்கப்படும். இதுவரை வெளியிடப்பட்டுள்ள மூன்று பாகங்களையும் தேவஸ்தானத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். இன்றும் பன்னிரு திருமுறைகளை முறையாக ஓதுகின்ற தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், தெய்வீக மரபுகளை உயிருடன் காக்கும் ஓர் ஒளிமாடமாக திகழ்கிறது.








அமரர் திருவாளர் வைத்தியகலாநிதி
அய்யாத்துரை பேரின்பநாயகம்
அவர்களுக்கு இந்நூல்
சமர்ப்பணம்






# நாவற்குழியில் “சிவபூமி திருவாசக அரங்கம் மண்டபம்” சிறப்பாக திறந்துவைக்கப்பட்டது!

யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனை வளாகத்தில் புதிதாக கட்டியமைக்கப்பட்ட “சிவபூமி திருவாசக அரங்கம் மண்டபம்” (14.07.2025) மாலை மகிழ்ச்சியும் ஆனந்தமும் நிறைந்த சூழலில் திறந்து வைக்கப்பட்டது.

வைத்திய கலாநிதி சண்முகநாதன் அருந்ததி தம்பதிகளின் நினைவாக, அவுஸ்ரேலியாவில் வசிக்கும் வைத்திய நிபுணர் மனோமோகன் – சிவகௌரி தம்பதிகள் தங்களது பெருந்தாராள மனப்பான்மையுடன் இந்த அரங்கத்தை உருவாக்கி அர்ப்பணித்துள்ளனர்.

சிறப்பான இந்த நிகழ்வில், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில், வைத்திய நிபுணர் மனோமோகன் – சிவகௌரி தம்பதிகள் இணைந்து மண்டபத்தின் திறப்பை நிகழ்த்தினர்.

வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



இந்நிகழ்வின் போது, “சிவபூமி திருவாசக அரங்கம்” திறப்பு விழா மலரும் வெளியிடப்பட்டது.

சமூக, மத, கலாச்சார மேம்பாட்டிற்கு ஒரு புதிய ஒளியைப் பரப்பும் இவ்வரங்கம், இனி பல முக்கிய நிகழ்ச்சிகளுக்கு மையமாக விளங்குமென அனைவரும் வாழ்த்தினர்.







